Registered with the Registrar
of Newspapers for India under
No. 10410

Registered No.
PY/44/2018-20
WPP No. TN/PMG(CCR)/
WPP-88/2018-20
Dated : 5-4-2018
Price : ₹ 3-00

# புதுச்சேரி மாநில அரசிதழ்

# La Gazette de L'État de Poudouchéry

# The Gazette of Puducherry

## PART - II

| சிறப்பு வெளியீடு | EXTRAORDINAIRE | EXTRAORDINARY |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற வெளியீடு | Publiée par Autorité | Published by Authority |
| விலை : ₹ 3-00 | Prix : ₹ 3-00 | Price : ₹ 3-00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| எண் | 14 | புதுச்சேரி | வியாழக்கிழமை | 2018 ஆம் | ஏப்ரல் மீ | 5 ௳ |
| No. | 14 | Poudouchéry | Jeudi | 5 | Avril | 2018 |
| No. | 14 | Puducherry | Thursday | 5th | April | 2018 |

(15 Chaitra 1940)

### அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்து, புதுச்சேரி

*எண் 20-13/2015-வரு/அ.கொ.ப.*

அறிவிக்கை

**1975-ஆம் ஆண்டு புதுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்துக்கள் (துணை விதிகள் இயற்றுவதற்குரிய நடைமுறை) விதிகளின் 2-ஆம் விதியின் கீழ் அறிவிப்பு**

அரியங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்திற்குச் சொந்தமான அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்தில் உள்ள காய்கறி விற்பனையாளர்கள், அங்காடி மேடைகள் முதலியன குறித்து அங்காடி அடிக்காசு கட்டணங்கள் (Market adikasu fees) வசூலிப்பதனை முறைப்படுத்துவதற்கான துணை விதிகள் உருவாக்கப்பட்டு 1990-ஆம் ஆண்டு சூன் மாதம் 26-ஆம் தேதியிட்ட 26-ஆம் எண் உடைய அரசிதழில் வெளியிடப்பட்டது.

2. 1973-ஆம் ஆண்டு புதுச்சேரி கிராம மற்றும் கொம்யூன் பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் (சட்டம் எண் 10/1973) 320-ஆவது பிரிவை 1975-ஆம் ஆண்டு புதுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்துக்கள் (துணை விதிகளை இயற்றுவதற்குறிய நடைமுறை) விதிகளுடன் சேர்த்துப் படிப்பதுடன் கீழ், அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்து நிர்ணயிக்கப்பட்ட அதிகாரி/ இயக்குநர், உள்ளாட்சித்துறை தனது 12-12-2016-ஆம் தேதியிட்ட அவருடைய 20/2016-17/அ.கொ.ப எண்ணிட்ட செயல்முறை ஆணையின் மூலம் கொம்யூன் பஞ்சாயத்துக்கு சொந்தமான அரியங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்தில் உள்ள காய்கறி விற்பனையாளர்கள், அங்காடி மேடைகள் முதலியன குறித்து அங்காடி அடிக்காசு கட்டணங்களை (Market adikasu fees) வசூலிப்பதனை முறைப்படுத்துவதற்கு துணை விதிகளை இயற்ற கருதியுள்ளதாலும்.

3. மேற்கண்டவாறு இயற்ற கருதிய துணை விதிகளின் திருத்த வரைவு, 1975-ஆம் ஆண்டு புதுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்துக்கள் (துணை விதிகளை இயற்றுவதற்குறிய நடைமுறை) விதிகளைச் சேர்ந்த 2-ஆவது விதியில் கூறியுள்ளபடி 2017-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23-ஆம் தேதியிட்ட 55-ஆவது எண் கொண்ட சிறப்பு அரசிதழில் 2017-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ஆம் தேதியிட்ட இவ்வலுவலக அறிவிப்பின் மூலம் பொதுமக்கள் தகவலுக்காக அரசிதழில் வெளியிடப்பட்டு, வெளியிடப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாள் வரை கொண்ட கால அளவில் மேற்படி வரைவு விதிகள் குறித்து ஆலோசனை அல்லது ஆட்சேபணைகள் இருப்பின் அவற்றை அனுப்புமாறு கோரப்பட்டதாலும்.

4. மேற்சொன்ன கால அளவுக்குள் வரைவு திருத்தம் சம்மந்தமாக எந்தவிதமான ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் வராததாலும்.

5. 1973-ஆம் ஆண்டு, புதுச்சேரி கிராம மற்றும் கொம்யூன் பஞ்சாயத்துக்களின் சட்டம் பிரிவு 320-இல் உட்பிரிவு (1)-இன் படியும் சட்டம் 208(2)(b) பிரிவின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரிக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை செலுத்தி அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்துக்கு சொந்தமான, அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்தில் உள்ள காய்கரி விற்பனையாளர்கள், அங்காடி மேடைகள் முதலியன குறித்து திருத்தப்பட்ட துணை விதிகளின் வரைவை இறுதியாக்க முடிவு செய்தார். 1975-ஆம் ஆண்டு, புதுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்துக்கள் (துணை விதிகளை இயற்றுவதற்குறிய நடைமுறை) விதிகளின் 3-ஆவது விதியில் கூறியுள்ளபடி உள்ளாட்சித்துறை இயக்குநர் அவர்கள் திருத்த வரைவு துணை விதிகளுக்கு ஒப்புதலும் அங்கீகாரமும் அளித்துள்ளார்.

**வரைவுத் திருத்தம்**

அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்திற்குச் சொந்தமான அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்தில் உள்ள காய்கறி விற்பனையாளர்கள், அங்காடி மேடைகள் முதலியன குறித்து அங்காடி அடிக்காசு கட்டணங்கள் (Market adikasu fees) வசூலிப்பதனை முறைப்படுத்துவதற்கான துணை விதிகள் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்படும்.

(i) துணை விதிகளின் எண் 1-இல் தற்போதிருந்து வரும் துணை விதிகள் கீழ்கண்டவாறு மாற்றியமைக்கப்படும்:

"1. அங்காடி அடிக்காசு குத்தகை ஏலம் வாய்மொழி நடைமுறைகள் வாயிலாகவோ அல்லது மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி வாயிலாகவோ அல்லது இணையதள ஒப்பந்தப்புள்ளி வாயிலாகவோ (e-Tender) நடத்தப்படும்".

(ii) துணை விதிகளின் எண் 4-இல் தற்போதிலிருந்து வரும் துணை விதிகள் கீழ்கண்டவாறு மாற்றியமைக்கப்படும்:

"4. ஏலம் கேட்பவர்கள் பிணை வைப்புத் தொகையாக (Earnest money deposit) ₹ 25,000 (ரூபாய் இருபத்தைந்து ஆயிரம் மட்டும்) தேசிய வங்கியில் பெறப்பட்ட கேட்பு வரைவோலையாக ஆணையர், அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்து பெயரில் எடுக்கப்படவேண்டும். இல்லையெனில் அந்த ஏலதாரர்கள் ஏலத்தில் பங்கேற்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்".

(iii) துணை விதி 9-இல் தற்போது இருந்து வரும் வரிசை எண் 1 முதல் 30 வரையில் பட்டியலில் கண்டுள்ள இனங்களுக்கு பதிலாக வரிசை எண்களும் அதன் கீழுள்ள இனங்களும் பின்வருமாறு சேர்க்கப்படவேண்டும்.

| (1) | (2) | (3) |
|---|---|---|
| | | ₹ |
| 1. | காய்கறி (கூடை ஒன்றுக்கு) | 5.00 |
| 2. | காய்கறி (சிறிய கோணிப்பை ஒன்றுக்கு) | 5.00 |
| 3. | காய்கறி (பெரிய கோணிப்பை ஒன்றுக்கு) | 5.00 |
| 4. | தேங்காய் (பெரிய கோணிப்பை ஒன்றுக்கு) | 5.00 |
| 5. | தேங்காய் (சிறிய கோணிப்பை ஒன்றுக்கு) | 5.00 |
| 6. | மீன் (கூடை ஒன்றுக்கு) | 5.00 |
| 7. | சிற்றுண்டிப் பொருட்கள் | 5.00 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| | | ₹ |
| 8. | உலர்ந்த மீன் (கருவாடு கூடை ஒன்றுக்கு) | 5.00 |
| 9. | வாழைக்காய் (தார் ஒன்றுக்கு) | 5.00 |
| 10. | வாழைப்பழம் (தார் ஒன்றுக்கு) | 5.00 |
| 11. | தாவரங்களின் உண்ணத்தக்க கிழங்குகள் (பெரிய கோணிப்பை ஒன்றுக்கு). | 5.00 |
| 12. | இலைகள் (கட்டு ஒன்றுக்கு) | 5.00 |
| 13. | கோழி (ஒன்றுக்கு) | 5.00 |
| 14. | ஆட்டிறைச்சிக் கடை (ஆடு ஒன்றுக்கு) | 5.00 |
| 15. | மாட்டிறைச்சிக் கடை (மாடு ஒன்றுக்கு) | 5.00 |
| 16. | மோர்க்கடை மற்றும் குளிர்பானக் கடை முதலியன (ஒன்றுக்கு) | 5.00 |
| 17. | நடமாடும் இனிப்புக் கடை (ஒன்றுக்கு) | 5.00 |
| 18. | கரும்பு கட்டு (ஒன்றுக்கு) | 5.00 |
| 19. | மாம்பழக் கடை (ஒன்றுக்கு) | 5.00 |
| 20. | பிற பழக்கடைகள்/நடமாடும் கடை (ஒன்றுக்கு) | 5.00 |
| 21. | வளையல், பாத்திரங்கள் மற்றும் அழகு சாதனங்கள் (நடமாடும் கடை ஒன்றுக்கு). | 5.00 |
| 22. | விற்கப்படும் விறகு/மிலாறுகள் (வண்டி ஒன்றுக்கு) | 5.00 |
| 23. | விற்கப்படும் மரப்பலகைகள் (வண்டி ஒன்றுக்கு) | 5.00 |
| 24. | விற்கப்படும் சுண்ணாம்பு (வண்டி ஒன்றுக்கு) | 5.00 |
| 25. | விற்கப்படும் மரம்/செங்கல்/கருங்கல் ஜல்லி (வண்டி ஒன்றுக்கு) | 5.00 |
| 26. | விற்கப்படும் மரம்/செங்கல்/கருங்கல் ஜல்லி (லாரி ஒன்றுக்கு) | 10.00 |
| 27. | விற்கப்படும் மணல் (லாரி ஒன்றுக்கு) | 10.00 |
| 28. | விற்கப்படும் மணல் (வண்டி ஒன்றுக்கு) | 5.00 |
| 29. | முட்டை (கூடை/பெட்டி ஒன்றுக்கு) | 5.00 |
| 30. | வைக்கோற்போர் | 5.00 |

*அரியாங்குப்பம், 2018 ஆம் ஏப்ரல் மீ 3 உ.*

**பெ. கலியமூர்த்தி,**
ஆணையர்.

**ARIYANKUPPAM COMMUNE PANCHAYAT, PUDUCHERRY**

*No. 20-13/2015-Rev./ACP.*

*Puducherry, the 3rd April 2018.*

NOTIFICATION

**Notice under rule 2 of the Pondicherry Commune Panchayats (Procedure for Framing of Bye-laws) Rules, 1975**

Whereas, bye-laws regarding, regulating the collection of Market Adikasu Fees by Vegetable Shop Vendors, Market Stalls, *etc.*, in Ariyankuppam Commune Panchayat have been framed and published *vide* Gazette No. 26, dated 26-6-1990.

2. And whereas, the Designated Officer/Council of Ariyankuppam Commune Panchayat has resolved *vide* Proceedings No. 20/2016-2017/ACP, dated 12th December 2016 to the said amendment to the bye-laws under section 320 of the Pondicherry Village and Commune Panchayats Act, 1973 (No. 10 of 1973), read with the Pondicherry Commune Panchayat (Procedure for Framing of Bye-laws) Rules, 1975, for regulating the collection of Market Adikasu Fees in respect of Vegetable Shop Vendors, Market Stalls, *etc.*, in Ariyankuppam Commune Panchayat;

3. And whereas, the Draft Amendment of the bye-laws were published as required under rule 2 of the Pondicherry Commune Panchayats (Procedure for Framing of Bye-laws) Rules, 1975 in the Extra Ordinary Gazette No. 55, dated 23rd August 2017 *vide* Notification No. 20-13/2015-Rev./ACP, dated 21st August 2017, inviting objections and suggestions, if any, from the public till the expiry of a period of thirty days beginning from the date of publication;

4. And whereas, no objections/suggestions in respect of the said Draft Amendment has been received within the stipulated period;

5. Now, therefore, in exercise of the powers conferred by sub-section (1) of section 320, read with under section 208(2)(b) of the Pondicherry Village and Commune Panchayats Act, 1973 the Designated Officer hereby makes the following amendment of the bye-laws regulating the collection of Market Adikasu Fees in respect of Vegetables Shop Vendors, Market Stalls *etc.*, in Ariyankuppam Commune Panchayat with

the approval and confirmation of the Director (Local Administration) as required under rule 3 of the Pondicherry Commune Panchayats (Procedure for Framing of Bye-laws) Rules, 1975, namely:-

**Amendment**

(i) Amendment for Bye-law No. 1, the following shall be substituted, namely:-

"1. The Market adikasu lease auction will be conducted by verbal proceedings or sealed tenders or e-Tender".

(ii) for Bye-law No. 4:- the following shall be substituted, namely:-

"4. The bidder shall pay of ₹ 25,000 (Rupees twenty-five thousand only) as earnest money deposit in the form of Demand Draft taken from a Nationalized Bank in the name of Commissioner, Ariyankuppam Commune Panchayat. Otherwise, the bidder will not be allowed to participate in the auction".

(iii) in Bye-law No. 9, Sl. No. (1) to (30), the following shall be substituted, namely:-

| (1) | (2) | (3) |
|---|---|---|
| | | ₹ |
| 1. | Basket of vegetables 1 No. | 5.00 |
| 2. | Small gunny bag of vegetables 1 No. | 5.00 |
| 3. | Big size gunny bag of vegetables 1 No. | 5.00 |
| 4. | Big size gunny bag of coconuts 1 No. | 5.00 |
| 5. | Small size gunny bag of coconuts 1 No. | 5.00 |
| 6. | Basket of fish 1 No. | 5.00 |
| 7. | Tiffin articles | 5.00 |
| 8. | Basket of dry fish 1 No. | 5.00 |
| 9. | Bunch of plantain 1 No. | 5.00 |
| 10. | Banana fruit bunch 1 No. | 5.00 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| | | ₹ |
| 11. | Big size gunny bag of edible root of plants 1 No. | 5.00 |
| 12. | Leaves (one bundle) | 5.00 |
| 13. | Chicken 1 No. | 5.00 |
| 14. | Mutton shop 1 sheep | 5.00 |
| 15. | Beef shop 1 calf | 5.00 |
| 16. | Butter milk shop/cool drinks shop, *etc.*, 1 No. | 5.00 |
| 17. | Mobile sweet stall 1 No. | 5.00 |
| 18. | Sugarcane bundle 1 No. | 5.00 |
| 19. | Mangos stall 1 No. | 5.00 |
| 20. | Other fruit stall/Mobile vehicle No. 1 | 5.00 |
| 21. | Bangles, vessels, cosmetic, fancy articles, mobiles stall | 5.00 |
| 22. | Firewood, sticks for sale (per cart load) | 5.00 |
| 23. | Wooden planks (per cart load) | 5.00 |
| 24. | Lime for sale (per cart load) | 5.00 |
| 25. | Wood/Bricks/Granite/Jally for sale (per cart load) | 5.00 |
| 26. | Bricks/Granite/Jally for sale (per lorry load) | 10.00 |
| 27. | Sand for sale (per lorry load) | 10.00 |
| 28. | Sand for sale (per cart load) | 5.00 |
| 29. | Eggs (per basket/box) | 5.00 |
| 30. | Haystack | 5.00 |

**P. KALIYAMURTHY,**
Commissioner.

online publication at **“http://styandptg.puducherry.gov.in”**
*Published by* The Director, Government Press
*Printed at:* Government Central Press, Puducherry.
*Posted at:* Puducherry HPO on every Tuesday